பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.லிட்.

மலர்: 15] சென்னை: மார்கழி 18 (2—1—68) செவ்வாய் ★ வெளியூர்: மார்கழி 19 (3—1—68) புதன் [இதழ்: 167

இந்திக்கு ஏது அந்தத் தகுதி?

"தமிழ் என்பது, வெறும் மொழிகளுள் ஒன்றல்ல—செறிந்த இலக்கியத்தையும் வாழ்க்கைநெறிகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ள உயர்தனிச் செம்மொழி ஆகும்!

"அதன் கலையும், நாகரிகமும், வாழ்க்கை நெறியும் உலகில் பல நாடுகளில் பரவியுள்ளன!

"இந்திக்கு அந்தத் தகுதியுண்டா? அது எத்தனை நாடுகளில் பரவியுள்ளது?"

—டாக்டர் ஏ. இராமசாமி

தலைநகரில் அண்ணா உருவச்சிலை

சிலையின் சிறப்பு!

அண்ணாஅவர்களின்உருவச் சிலை அமைப்பு, அவரது ஆன்றவிழ்ந்து அடங்கிய கொள்கைச் சான்றாண்மையைக் காட்டுவதாய் அமைந்திருக்கிறது!

தமிழ் என்றால். குறள்—நூல் என்றாலும் குறள்; அந்தத் திருக்குறள், அண்ணாவின் இடக் கையில் இருக்கிறது! அதன் ஒரு பகுதி பிரிந்து—அதன் இடையில் அண்ணாவின் ஒரு விரல் அடையாளம்போல் அமைந்திருக்கிறது!

வலக் கையோ, மேலே தூக்கி—தாம் பெற்ற பேரின்பத்தை உலகம் பெற வழி காட்டிடும் வகையில் அமைந்துள்ளது! 'அண்ணா காட்டும் வழி நல்வழி; அதுவே குறள்வழி' என்று சுட்டிக்காட்டுவதாய் அமைந்திருக்கிறது!

உயர்ந்து அமைந்த பளிங்குக் கல் பீடத்தின்மீது அமைந்த அந்தச் சிலையமைந்திருக்கும் அழகே அழகு!

பீடத்தின் இரு பக்கங்களில் அண்ணா அவர்களின் பெயர் ஆங்கிலத்திலும், தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு பக்கம் சிலை திறந்தவர் பெயர் இருக்கிறது.

இன்னொரு பக்கம்தான் அண்ணாவின் உயிர் மூச்சான பண்புச் சொற்கள் அமைந்துள்ளன! புத்த தர்மத்தின் மும்மணிகள் போன்ற கண்ணியம்—கடமை—கட்டுப்பாடுஎன்ற மும்மணிக் கொள்கை, கம்பீரமான எழுத்துக்களில் பொறிபட்டு, அண்ணாவின் இதயத்தை ஊருக்கு உணர்த்துகிறது!

'நம் நாடு' உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பிதழ்

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி 'நம் நாடு' 5—1—68 அன்று சிறப்பிதழாக 12 பக்கங்களில் வெளிவரும்.

விலை 15 காசு

கூடுதல் பிரதிகள் தேவைக்கு விற்பனை

அறிவாளர் இராமசாமி திறந்துவைத்த சிறப்புவிழா

தமிழ் மண்ணின் புகழ் முடியில் புதிய முத்துப் பதிப்பு

சென்னை, சன. 2—

தமிழகத் தலைநகரின் இதயம்போன்ற பகுதியான மலைச் சாலை நடுவட்டக் கூடலில் (ரவுண்ட் டாணா) பேரறிஞர் அண்ணாவின் பேருருவச் சிலையினை உலகப் புகழ்பெற்ற அறிவாளர் ஆற்காட்டு இராமசாமி (முதலியார்) அவர்கள் நேற்று மாலை திறந்துவைத்தார்.

தமிழ் மண்ணின் தலைநகரம் நேற்று பெருவிழாக் கோலம் பூண்டது! தமிழரெல்லாம் தம் வேறுபாடு மறந்து, பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலையின் பொலிவு காணத் திரண்டிருந்தனர்!

அடக்கத்தின் உறைவிடமான பேரறிவுப் பெட்டகததிற்குச் சிலை வைத்த இடம் சிறப்பான ஒன்றாகும்; சென்னைக்கு வருகின்ற யாரும், வரும்போது அவரைப் பார்த்தே வரவேண்டும்போல் மலைச் சாலையின் நடுவில் அமைத்திருக்கிறார்கள்!

'ரவுண்ட் டாணா' என்று பழகிப்போன அந்தப் பகுதி, 'அண்ணா சதுக்கம்' என்றே இனி அழைக்கப்படும் அளவுக்கு அழகுற அமைந்தது சிலையின் அமைப்பு.

அண்ணா அரசியல் வாழ்வின் முதல் மேடை, ஆற்காட்டாரின் ஆங்கிலப் பேச்சின் மொழிபெயர்ப்போடு தொடங்கிற்று—என்பதற்குச் சிறப்புச் சேர்ப்பதுபோல், இந்தச் சிலை திறக்கும் பெரும பொறுப்பை ஏற்றவரும் ஆற்காட்டு இராமசாமி அவர்களே!

சிலையினைத் திறந்துவைத்து ஆற்காட்டார் பேசிய உருக்கமான பேச்சு, தமிழ் மண்ணின் மூலை முடுக்கெல்லாம் எதிரொலிக்கும் உணர்ச்சியின் பிரதிபலிப்பு! அண்ணாவின் பண்பு நலன்களைப் பாராட்டிவிட்டு 'அவரே எனக்கும் தலைவர்' என்றாரே—அப்போது, நெட்டுயிர்த்த உணர்ச்சிப் பெருக்கினைச் சொல்லில் எப்படி வடித்திட?

ஆபிரகாம் லிங்கனின் வாழ்வோடு அறிஞர் அண்ணாவின் வாழ்க்கையைப் பொருத்திக்காட்டி ஆற்காட்டார் பேசியபோது, கூடியிருந்த இதயங்கள் பெருமிதத்தால் மிதந்தன!

ஏழைகளின் தலைவனுக்கு எழிலான சிலை அமைத்து நன்றி செய்த தமிழ் மண், தன் புகழ்முடியில் புது முத்தைப் பதித்துக் கொண்டது!

உலக அரங்கின் பெருமன்றங்களில் தம் புகழ்நாட்டிய ஆற்காட்டுப் பெரியவர் இராமசாமி அவர்கள், ஒரு சிறு விசையை இயக்கி—அண்ணாவின் சிலையைத் தழுவிக்கிடந்த திரைச் சீலையை மெல்ல அவிழ்த்து இறக்கியதும், அந்த முகப் பொலிவில் சொக்கிப் போனார்கள், கூடியிருந்த மக்கள்!

உலகத் தமிழ் மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாய் அமைந்த அண்ணாவின் சிலைத் திறப்பு விழாவினை, இசைச் சித்தர் சிதம்பரம் செயராமன் அவர்கள் தமிழ் வாழ்த்தோடு துவக்கிவைத்தது சுவை[...]யாக இருந்தது. இந்த நிகழ்ச்சிக்கென்றே சிறப்பாக, புத்தனே[...] ரா. சுப்பிரமணியம் அவர்கள் யாத்த பாடலையும் இசைத்[...] இசைச் சித்தர்!

கழகத்து அவைத் தலைவர்—தமிழகத்துக் கல்வி அமை[...] நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அண்ணா அவர்க[...] பண்புச் சிறப்புக்களைப் பாராட்டிப் பேசிய பின்னர், ஆற்கா[...] இராமசாமி அவர்கள், அண்ணா உருவச் சிலையினைத் திறந்து வைத்தார்.

அதை அடுத்து உருக்கமான உணர்ச்சிமிக்க உரையாற்றிய பின், தமிழக அரசுப் பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், சிலையைப் பெற்று நன்றிப் பெருக்கோடு உரை நிகழ்த்தினார்.

சிலை வழங்கிய கொடை வள்ளல் எம். ஜி. இராமச்சந்தி[...] அவர்களுக்கும், சிலை வடித்த எஸ். பி. பிள்ளை அவர்களுக்கும் [...] கருணாநிதி மாலைகள் அணிவித்தார்.

சிலையைத் திறந்துவைத்த ஆற்காட்டாருக்கு இலட்சிய ந[...] இராசேந்திரன் மலர்மாலையணிவித்தார்.

நூறாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்த இந்த விழாவில், அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, செ. மாதவன், சாதிக்பாட்சா, மா. முத்துசாமி, சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார், மேலவைத் தலை[...] எம். மாணிக்கவேலர், எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன், எ[...] வி. நடராசன், இலங்கைத் தமிழ் அமைச்சர் திருச்செல்வம், மேயர் டாக்டர் அபிபுல்லா பேக், மற்றும் உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகள், சட்டமன்ற—பாராளுமன்ற—மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அறிவுப் பயணத்தைத் தொடருவோம் -- அண்ணாவின் போராட்டம் வென்றே தீரும்!

"மத்தியிலே அமைந்துள்ள அரசு' காற்றடிக்கும் பக்கமெல்லாம் சாய்கிற அரசாக உள்ளது! இந்திக்காரர்கள் போட்ட கூச்சலுக்காகக் கடைசி நிமிடம்வரை ஆட்சி மொழி மசோதாவுக்குத் திருத்தங்களைக் கொண்டுவந்த அரசு இது! இந்த அரசு நீடிக்கும் என்று நான் நினைக்கவில்லை!

"மொழிக் கொள்கையில் அண்ணா உறுதியாக நிற்கிறார்! இந்த உறுதி காரணமாக அவர் இந்தப் போரில் வெற்றி பெறுவார்!

"தாங்கள் அறியாதவர்கள் என்பதோடு தங்கள் அறியாமையை உணராமலும் பேசித் திரியும் நெருப்புக்கோழி மனோபாவத்தினரை எதிர்த்து அண்ணா அவர்கள் போராடி வருகிறார்கள்!

"இப்போது அவர்கள் நிறைவேற்றி வைத்திருக்கும் ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதாவையும் திருத்தத்தையும் தென்னகம் ஒரு நாளும் ஏற்காது!

"அவர்கள் சங்கடமெல்லாம், தென்னாட்டார் அறிவில் சிறந்தவர்களாக இருப்பதுதான்! அறிவே சக்தி—அது வென்றே திரும்! மடமை தோற்கும்!

"அறிவைப் பெறுவதில் தங்குதடையற்ற பயணத்தை நாம் தொடருவோம்!"

என்று, டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) அவர்கள், 1—1—68 அன்று அறிஞர் அண்ணா சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழ் மாநாட்டு அஞ்சல் வில்லையில் இந்தி எழுத்து

டில்லியின் விஷமத்தனம் -- அண்ணா கோதிப்பு

சென்னை, சன. [...]

"உலகத் தமிழ் மாநாட்டையொட்டி வெளிவரும் அஞ்சல் தலை[...]யில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சொற்றொ[...] இருக்கவேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதியிருந்தே[...] ஆனால், அந்தக் குறிப்பிட்ட சொற்றொடரை அவர்கள் [...]யில் அச்சடித்து அனுப்பியிருக்கிறார்கள்; இதனை வே[...] உலகத் தமிழ் மாநாட்டினர் ஒப்புவார்களா என்ப[...] இப்போதுள்ள கேள்வி. இது, தேவையற்ற முறையில் [...] சலை ஊட்டுவதாக அமைந்திருக்கிறது!

"இதுபோல், டில்லியிலிருந்து சென்னை வரும் 'எக்ஸ்பிரஸ்' வ[...]டியை, 'தட்சிண எக்ஸ்பிரஸ்' என்று எழுதியிருக்கிறார்க[...] பல முனையிலிருந்தும் முறையீடுகள் சென்றபிறகு, இப்பொழு[...]தான் அதை மாற்ற இசைந்துள்ளார்கள். இப்படிச் சிறு[...] காரியங்களுக்கெல்லாம் நமக்கு எரிச்சல் வரும்படிச் செ[...]கிறார்கள்!"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், தொலைபேசித் [...] குறிப்பேடு வெளியீட்டு விழாவில் பேசுகையில் மனம் [...] கூறினார்கள்.

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 18 (2—1—68) செவ்வாய்

உலகத் தமிழ் மாநாடு

பிறந்துள்ள புத்தாண்டு, தமிழ் கற்ற உலக நல்லறிஞர்கள் ஒன்றுகூடி, செந்தமிழை நுணுகி ஆராய்வதைத் துவக்கமாகக் கொண்டு பிறந்திருக்கிறது.

தமிழ் மொழியை நுணுகி ஆராயும் திருப்பணியில் ஈடுபடுகின்ற தமிழறிஞர்களின் தாய்மொழி அல்ல தமிழ்; வெவ்வேறு மொழியைத் தத்தம் தாய்மொழியாகக் கொண்டிருப்பவர்கள், நம் அரும் தாய்மொழியின் தனிச் சிறப்பைப் பற்பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து அறிவிக்கத் துணிந்திருப்பது, நாம் எத்தகைய செம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கும் பெரும் பேற்றினைப் பெற்றிருக்கிறோம் என்பதை நினைக்குந்தோறும், இன்பம் நமது உள்ளங்களில் பொங்கி வழிகின்றது.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை இந்தியக் குடியரசுத் தலைவர் துவக்கிவைக்கின்றார்.

இம்மாநாட்டில், தமிழை ஆராயும் விழுமிய குறிக்கோளுடன் கூடுகின்ற தமிழ் அறிஞர்கள், தமிழ் மொழியின் தொன்மை—இயல்பு—வரலாறு—நாகரிகம் ஆகிய பலவற்றைக் குறித்துத் தங்களுக்குள்ளாக விவாதித்து விளக்கம் உரைத்தும், மற்ற மொழிகளுடன் ஒப்பவைத்து நோக்கித் தமிழ் மொழியின் தனித்தன்மையைத் தெளிவுபடக் காட்டியும், நமது தாய்மொழியின் மேம்பாட்டை நமக்கு உணர்த்துவர்.

எத்தகைய உயர்ந்த மொழியை நாம் தாய்மொழியாகக் கொண்டிருக்கிறோம் என்ற பேருண்மையை, தமிழ் மொழியின் தாயகமாம் தமிழகத்தில் கூடி—தமிழ் மக்களுக்குப் புத்தறிவூட்ட—உலகத் தமிழ் மாநாட்டில் பங்கேற்கின்ற நலலறிஞர்கள் பலரையும் வரவேற்கின்றோம்; 'அவர்கள் பணி வெல்க' என வாழ்த்துகின்றோம்.

கற்றவருக்கு மட்டுமே தெளிவு தருவதாக நல்லறிஞர்களின் தமிழாய்வு அமைந்திருந்தால் மட்டும் போதுமா? கற்றவர் கல்லா[...]ர் அனைவருக்கும் தமிழ் மொழியின் மேம்பாட்டை உணர்த்திடக் [...]ய தமிழ்க் கலைக் கண்காட்சியை, தமிழகத்தின் மூதறிஞர்—[...]கத்தவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற மேதை—எல்[...]ாருக்கும் முதியவராக உள்ள அன்பர் ஆச்சாரியார் அவர்கள் [...]துவைக்கின்றார்.

உலகத் தமிழ் மாநாட்டின் தொடர்பாக, தமிழ் இலக்கிய நல்லாசிரியர்கள் சிலருக்குச் சிலைகளும் எழுப்பப்பட உள்ளன.

'கவியரசருக்கரசர்' கம்பனுக்குச் சிலை உண்டு; 'கற்புத் தெய்வம்' எனச் சிலப்பதிகாரம் பாராட்டிப் புகழும் கண்ணகிக்கு சிலை உண்டு; 'தேம்பாவை' பாடிய இத்தாலிய நாட்டுக் கிறித்துவப் பாதிரியார் வீரமாமுனிவர்—திருவாசகம் - நாலடியார் - திருக்[...]றள் ஆகிய நூற்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போப்—[...]ாவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற ஆராய்ச்சி நூலை [...]ற்றிய கால்டுவெல் பாதிரியார்—தேசியக் கனல் மூட்டிய பாரதி—பகுத்தறிவுப் பாவேந்தர் பாரதிதாசன்—உலகப் பொதுமறை[...]ம் திருக்குறள் தந்த திருவள்ளுவர்—தமிழ்ப் பாட்டி அவ்வையார் ஆகிய அனைவருக்கும் சிலைகள், கடற்கரையில் எழுப்பப்படுகின்றன.

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் வெண்கலச் சிலை, நகரத்தின் இருதயமான பகுதியாக இருந்திடக்கூடிய மவுண்ட் சாலையில்—ரவுண்ட் டாணா பகுதியில் சனவரி முதல் நாளே 'ஆங்கிலத்தில் தலைசிறந்த பேச்சாளர்—எழுத்தாளர்—அரசியல் பேரறிஞர்' என்று புகழுக்குரிய முதியவர் ஆற்காடு இராமசாமி அவர்களால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழிக்கு அறிஞர் அண்ணா செய்திருக்கின்ற---செய்து வருகின்ற---செய்ய இருக்கின்ற அரும்பணி, அளவிடற்கரியதாகும். 'அரசியல் கருத்துக்களை எவரும் புரிந்துகொள்ளத்தக்கவகையில் எளிய தமிழில் பேச இயலும்' என்ற உண்மையைத் தமிழகத்தில் முதன்முதலாக மெய்ப்பித்துக் காட்டியவர்--காலஞ்சென்ற திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்களாவார்; அதே முறையில் தமிழ் மொழிக்கு ஆக்கந் தேடியவர்--காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அவர்களாவார்; அவர்கள் வழியைப் பின்பற்றி, தமக்கெனத் தனி ஒரு புதுப் பாதையை வகுத்துக்கொண்டு, வன்மைமிக்க சொல்லாலும் எழுத்தாலும் அரசியல் தமிழுக்கு ஆக்கம் தேடியும், 'அவ்வழியே விரும்பத்தக்க வழி' எனப் பலப்பலர் பின்பற்றத்தக்க நிலையைத் தமிழுக்குத் தேடித் தந்துகொண்டிருப்பவருமான அறிஞர் அண்ணாவுக்கு வெண்கலச் சிலை திறந்திருப்பது, அரசியல் தமிழுக்கு மட்டுமல்லாது, அரசியல் பண்பாடு--சனநாயகப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கும் செய்திருக்கின்ற சிறப்பாகும்.

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தமிழ்ப் பண்பாட்டை [...]க்கும் காட்சிகளடங்கிய ஊர்வலம், 3-ந் தேதி மாலை நடைபெறப் [...]கிறது. அவ்வூர்வலத்தில், 27 அலங்கார வண்டிகள் தமிழகத் [...]பண்டையப் பெருமையையும், தமிழக மன்னர்களின் கொடை[...]--அறநெறி ஆகியவற்றையும் உணர்த்தக்கூடிய ஒவியக் [...]களைத் தாங்கிக்கொண்டு உலா வரும்.

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, சென்னைத் தீவுத் திடலில், '[...]புகார்' நகரம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த எழில் நகரத்[...] அமைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரங்கில், தமிழக அமைச்சர்[...]—தமிழ் கற்ற பெரும் புலவர்கள்—நட்சத்திர நடிகர்கள்—நாவலர்—[...]ாவலர்—சிறந்த பேச்சாளர்கள் ஆகியோர் பங்கேற்கும் பட்டி[...]மன்றம், நெஞ்சைத் தொடும் கவியரங்கம், உணர்ச்சியூட்டும் சொற்பொழிவுகள், இன்பமளிக்கும் இசை நிகழ்ச்சிகள், நற்கருத்தளிக்கும் நாடகங்கள் ஆகியவை இடம்பெறும்.

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடிய தமிழ் அறிஞர்கள் அனைவரையும், அம்மாநாட்டையொட்டி நடைபெறக்[...]டிய பல காட்சிகளையும் கண்டு மகிழ வரக்கூடிய அனைவரையும், [...] என வரவேற்கின்றோம்.

—கா. க.

தமிழ் வாழத் தாம் வாழும் அண்ணா!

முத்து

'வலிதே காலம்; வியப்பல் யாமே' என்று தமிழ்ப் பெரும் புலவர் ஒருவர் அண்மையில் எழுதிய பாவிய வரி, நினைவுக்கு வருகிறது!

ஆம்; காலம் வலியதுதான்; அதன் பேராற்றல் கண்டு உள்ளபடியே நாம் வியக்கிறோம். கால அடைவில் ஞாலத்தில் நிகழும் மாற்றங்கள், சரித்திரத்தில் புதிய திருப்பங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன!

காலச் சக்கரத்தின் சுழற்சியில் அறைபட்டு உருத் தெரியாமல் போனவர்கள் இருக்கிறார்கள்! அதன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் பின்தங்கிப் போனவர்கள் தொகை ஏராளம்! ஒரு சிலர்தான், காலச்சக்கரத்தின் சுழற்சியைக் கட்டுப்படுத்தித் தம் ஆற்றலுக்குள் வைத்துக் கொண்டார்கள்! அப்படிப்பட்டவர்களுள் பேரறிஞர் அண்ணா அவர்களும் ஒருவர்!

> **"பேரறிஞர் அண்ணா ஒரு பூரண மனிதர்; அவர் ஆற்றலை நாடு புரிந்துகோண்டது; நாளை இந்த நாட்டின் 'தலைவிதி'யை எழுதும் பொறுப்பை அவரிடம் ஒப்படைக்கச் சாசனம் எழுதிக் கோண்டிருக்கிறார்கள் மக்கள்; அதன் முன்னறிவிப்பே, அவர் இந்த மாநாட்டுக்குத் தாங்கும் தலைமை"**

என்று சென்ற ஆண்டில்—கிட்டத்தட்ட இந்த நேரத்தில்—'நம் நாடு' எழுதிற்று.

அந்த விருகம்பாக்கம் மாநாட்டிலே பேசுகிறபோதுதான் அவர் சொன்னார் :—

> **"தமிழ் மொழியைக் காத்தாக வேண்டும்; தமிழ் இனத்தை தமிழ்ப் பண்பாட்டைக் காத்தாக வேண்டும்; அதற்கு இன்னமும் ஐம்பதாண்டுகள் தோடர்ந்து உத்வேகத்துடன் பாடுபட்டால்தான், உலக வரலாற்றில், 'நாங்கள் தமிழர்கள்' என்று தலைநிமிர்ந்து கூறக்கூடிய நிலை ஏற்படும்; அந்தப் புதிய வரலாற்றின் சிறப்புமிக்க அத்தியாயத்தை நாம்தான் தோற்றுவிக்க வேண்டும்"**

இப்படித் தமக்குத் தாமே சில விதிகளைச் செய்து கொண்டு, அவற்றைச் செயல்படுத்த அண்ணா அவர்கள் துடிக்கும் துடிப்பின் வெளிப்பாடுதான் தமிழக வரலாறு!

தமிழர் தலைநிமிர்ந்து நிற்கச் செய்யவே தாம் வாழ நினைக்கும் அந்தப் பேரறிஞரின் திருவுருவச் சிலை, உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் திறக்கப்படுவதிலேதான் சிறப்பே இருக்கிறது!

தனி யொருவர் நெஞ்சில் பொறிவிடும் சில தத்துவங்கள்தான், உலகத்தை மாற்றியமைக்கும் ஆற்றல் பெற்றுவிடுகின்றன!

குடியாட்சி, சமதர்மம் போன்ற உலகம் ஒப்புக்கொண்ட இலட்சியங்கள் எல்லாம், தனி மனிதர்களின் சிந்தனைக் கிடங்கில் சுடர்விட்ட பொறிகள்தான்!

அந்த வகையில் தமிழ் மண்ணின் சிந்தனையோட்டத்தைத் திசை திருப்பிவிட்ட மாமேதை அண்ணா அவர்கள்!

அவர் ஆற்றலைப் புரிந்துகொண்டு பாராட்டும் வகையிலேதான், இன்றைக்குத் தமிழகத்துத் தலைநகரில் அவர் வாழும் நாளிலேயே அவருக்குச் சிலையெடுக்கிறார்கள்!

தமிழ் மரபு தன் 'களை' இழந்து தவித்த நாளில்—தமிழ் இனம் தன் 'ஜீவன்' இழந்து சாயும் வேளையில்—தமிழ் மொழி, மாயக்காரரின் மொழிக் கலப்பில் சிக்கித் திணறுகையில்—அவற்றின் மீட்பராய் வந்து சேர்ந்த பேரறிஞர், அண்ணா அவர்கள்!

தம்முடைய மூர்த்திப் பிரதாபத்தின் வலிமையில் தமிழ் மண்ணின் சொந்தக்காரரர் அனைவரையும் ஒட்டுமொத்தமாய்க் கட்டி அழைத்துச் சென்ற வல்லாண்மையாளர், அவர்!

அவருக்குச் சென்னைத் திருநகரம் சிலை எடுத்துச் சிறப்பிக்கிறது!

பாவலர்கள், அரங்கேறி அவர் புகழினைப் பாவியங்களாய் இசைத்திருக்கிறார்கள்!

நாவலர்கள், மேடைகளில் அவர் சிறப்பை முழங்கிவிட்டார்கள்!

நாடகங்கள்—திரைப் படங்கள், அவர் புகழ் சொல்லிப் பெருமைபெற்றன!

ஆனால், 'என்னெண் கலையும் இசைந்து அவர் உடன் போகும் சிறப்பைச் சிலையிலும் வடிப்

போமே' என்று எண்ணிவிட்டார்—கொடுத்துச் சிவந்த கையர், புரட்சி நடிகர் இராமச்சந்திரன்!

கேட்டார் கேட்டபோது, கேட்டதைக் கொடுத்துச் சேர்த்த புகழைவிட, புரட்சி நடிகர் இந்தச் சிலையை எடுத்துச் சேர்த்த புகழே பெரிது!

ஏனென்றால், தாம் பிறந்த மண்ணின் புகழ் மணக்க வாழ்ந்த பலருடைய தியாகங்கள், மதிக்கப்படாமலே போய்விட்டிருக்கின்றன! ஏட்டிலே சில ஏறிக்கிடக்கலாம்! கதை வழக்காய்ச் சில இருக்கின்றன! அவ்வளவே!

எழுத்தின் வளைவு நெளிவுகளில்—சொற்கோவையின் புரைகளில் — வாக்கிய அமைப்பின் இரண்டு இடுக்குகளில் புதைந்து கிடக்கும் எழுத்தாளனின் ஆற்றலைப் பாராட்டி சுவைஞர் இரண்டு வரி கடிதம் எழுதும்போது, எழுத்தாளர் பெறும் இன்பமே தனி! அவருக்கு நாம் செய்யும் சிறப்பு அது—அவ்வளவுதான்! அவர் இதயத் துடிப்பின் இனம் புரிந்துகொண்ட போக்கு—அவ்வளவுதான்!

அதேபோலத்தான், காலமெல்லாம் சொந்தக் கவலை மறந்து, நாட்டுக்கு வாழும் நல்லவர்களை, அவர்கள் வாழும் நாளிலேயே வாழ்த்துவதே சிறப்பு!

'சுப்பிரமணிய பாரதியை—வ. உ. சிதம்பரத்தை—அவர்கள் வாழ்ந்த நாளில் உள்ளபடி பாராட்ட --சிறப்புச் செய்யத் தவறிவிட்டது தமிழகம்'' என்ற அவச்சொல்லை, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குச் சிலை எடுத்ததன் மூலம் போக்கிவிட்டனர் தமிழர்—சிறப்புச் சேர்த்தார், புரட்சி நடிகர்!

'வாழ்கின்றவர்களுக்குச் சிலை எதற்கு?' என்று சொல்லுகிறவர்கள், சொல்லிவிட்டுப் போகட்டும்!

நாம் அவர்களுக்குச் சொல்லிவைப்போம்—'தமிழர்தம் வரலாற்றை முறையாக வைக்காமற் போனமைதான், இன்றைய இடர்ப்பாட்டுக்குக் காரணம்' என்று அறிவுறுத்துவோம்!

உலகத்திலேயே முதன்முதலில்,'மனிதத்தன்மை' மிக்கதொரு மார்க்கத்தைக் காட்டிய மேதை—என்று பாராட்டப்பெறும் சீன அறிஞர் கன்பூஷியஸ் **பெயர்,** இன்னமும் ஆராய்ச்சியில் இருககிறது; ஏனென்றால், கிறித்துவப் பாதிரிகள் 16-ம் நூற்றுண்டில் அவரைக் குறித்திட்ட பெயர் அது!

அவர் மூலப் பெயர் 'குங்—புத்—சே' என்பாரும், 'கின்' என்பாரும், 'சுங்—நீ' என்பாருமாய், பெயர் வேறுபாட்டில் திணறிக்கொண்டிருக்கிறார்கள்!

இந்த நிலையில், திறனழிந்து --செயலிழந்து தொய்ந்து போன தமிழரின் நரம்புகளில் சூடேற்றிய புதுமை வீரரின், 'தோற்றம் எது?' என்ற விவாதத்தில், வருங்காலம் நேரத்தை வீணாக்கிட வேண்டாம்!

'உருவப் பொலிவு இதுதான்; இனி அவர் உணர்ச்சியைப் புரிந்துகொள்ளுங்கள்' என்று சொல்லும் வகையில், இந்தச் சிலையைச் செய்திருக்கிறார்கள்!

'ஹே! இது என்ன பெரிய ஆற்றல்? இவருக்கொரு சிலையா?' என்று சொல்லுகிற 'அறிவாளர்கள்' சொல்லட்டும்!

'அண்ணா ஒரு பகலவன்' என்கிறோம் நாம்! 'அன்று அன்று; அவர் வெறும் மண் விளக்கே' என்று சொல்லிப் பெருமை பெறுகிறார்கள் சில பேர்!

'பகலில் மண் விளக்கின் பெருமை தெரியாதவர்கள், பகலவன் மறைந்தபின், மையிருள் சூழ்ந்த இருளில் அந்தச் சின்னஞ்சிறு மண் விளக்கின் ஆற்றலைப் புரிந்துகொள்ளுவார்கள்!

மாகவி இரவீந்திரர், மிக அழகாக அதனைத் தான் சொன்னார் :—

> **"எனது கடமைகளை ஏற்றுக்கோள்ள இங்கு யார் இருக்கிறார்கள்" என்று மறையும் கதிரவன் கேட்டானும்!**
>
> **"தலைவனே! என்னால் இயன்றதைச் செய்கிறேன்" என்று மண்விளக்குக் கூறிற்றும்!**

கவியின் இந்தக் கண்ணோக்குப் போதும்—அதை விளக்கிக் காட்ட!

கிளைகளிலே அழகாகப் பூக்களை மலரச் செய்வ

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகைசெய்வோம்!

தமிழினத்தின் தனிச் சிறப்பை தரணிக்கு உணர்த்தத் தலைநகரில் திருவிழா

அமைச்சர் நெடுஞ்செழியன் விடுக்கும் அன்பழைப்பு

சென்னையில் நடக்கும் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கினையொட்டித் தமிழகக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 31—12—67 இரவு வானொலி வாயிலாகத் தமிழ்ப் பெருமக்களுக்கு அன்பழைப்பு விடுத்து ஆற்றிய உரை வருமாறு :—

"தமிழுக்கு அமுதென்று பேர்—இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கருத்தைத் தமிழகத்தின் தலைநகரில் காட்சியாக்கிக் காட்டத் தமிழக அரசும், தமிழகமெங்கணுமுள்ள தமிழ்ப் பேரறிஞர்களும் முனைந்துள்ளனர்.

இந்தத் தமிழ்ப் பெருவிழா சனவரித் திங்கள் முதல் நாள் தொடங்கி 11-ம் நாள் முடியவிருக்கிறது.

இந்த விழாவில் கலந்துகொண்டு தமிழாராய்ச்சிக் கழகத்தின் கருத்தரங்கினை நடத்த ஆஸ்திரேலியா, கனடா, செக்கோஸ்லேவேகியா, டென்மார்க், பின்லாந்து, பிரான்சு, கிழக்கு ஜெர்மனி, ஆங்காங், இந்தோனேசியா, இஸ்ரேல், இத்தாலி, ஜப்பான், கொரியா, மோரீசு, மெக்சிகோ, பிலிப்பைன்ஸ், போலந்து, ருமேனியா, ஸ்பெயின், தாய்லாந்து, பிரிட்டன், அமெரிக்கா, இரஷ்யா, உருகுவே, தெற்கு வியட்னாம், ஹாலந்து, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து இருநூறுக்கும் மேற்பட்ட அறிஞர்களும், வெளி மாநிலங்களிலிருந்து 30 அறிஞர்களும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 190 அறிஞர்களும் வருகை தரவிருக்கிறார்கள்.

விழாவினைக் காண வாரீர்!

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று புதுமைக் கவி பாரதியார் அன்று கனவு கண்டார்; அந்தக் கனவை நினைவாக்கும் முயற்சியாகத்தான் இந்த இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மாநாடு, சீரும் சிறப்பும் பெற—பொலிவும் வலிவும் தாங்க—அறிவும் ஆற்றலும் மிளிர—உணர்ச்சியும் கிளர்ச்சியும் பொங்க—புகழும் பெருமையும் வளர—மகிழ்ச்சியும் இன்பமும் உவப்பெடுக்க—சென்னை மாநகரில் நடைபெறவிருக்கிறது.

தேமதுரத் தமிழை உலகமெல்லாம் பரவ வகைசெய்யக்கூடியவர்கள் இந்தப் பெருவிழாவிலும், இதனையொட்டிக் கூட்டப்படவிருக்கும் கருத்தரங்கிலும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.

இந்த விழாவினைக் கண்டுகளித்து—கருத்துரைகளைக் கேட்டு மகிழ்ந்து, பெருமிதம் கொள்ளுமாறு தமிழகமெங்கணுமுள்ள முதியோர் -- இளையோர், கற்றவர் - மற்றவர், ஆடவர் - பெண்டிர் அனைவரையும், 'சென்னை நோக்கி வாரீர், வாரீர்' எனப் பூரிப்போடும் பெருமையோடும் அழைக்கிறேன்.

உலகுக்கு எடுத்துக்காட்ட பெரிதும் பயன்படும்

இந்தத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மாநாடு, 'தமிழ்—தமிழரின் நாகரிகம்—தமிழரின் பண்...

நாடகம்---நாட்டியம்—சிற்பம்—இசை—கட்டிடம் போன்ற அருங்கலைகள்—தமிழரின் நெறி—தத்துவம்—மருத்துவம்—வாணிபம்—பொருளியல்—அரசியல்—பொறியியல்—வானவியல்—உழவியல் போன்ற துறைகள் போன்றவை எவ்வளவு பழமையானவை -- தொன்மையானவை -- சிறந்தவை -- உயர்ந்தவை' என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டப் பெரிதும் பயன்படும்.

இந்தச் சிறப்புக்களையெல்லாம் உலகுக்கு உணர்த்தும் வகையில்—முதல் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மாநாடு — மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் கோலாகலமாக நடைபெற்றது; அதைவிடப் பன்மடங்கு சிறப்புப்பெறும் முறையில் இரண்டாவது மாநாடு சென்னையில் நடைபெறவிருக்கிறது.

ஆற்றல்மிக்க அண்ணுவுக்குத் தமிழகம் தரும் சிறப்பு

கருத்தரங்கு சனவரித் திங்கள் நான்காம் நாள்தான் தொடங்குகிறதுஎன்றாலும் விழா, சனவரித் திங்கள் முதல் நாளே தொடங்கி விடுகிறது என்று சொல்லலாம்.

சனவரி முதல் நாள், புதிய தமிழகத்தை உருவாக்கி—அதனைத் தன் சொல்லாலும் எழுத்தாலும், அறிவாலும் ஆற்றலாலும் ஆண்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவச்சிலை, மலைச்சாலை வட்டப் பகுதியில் (மவுண்ட் ரோடு ரவுண்ட் டாணவில்) திறக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்ச் சான்றோருக்குத் தமிழகம் தரும் மதிப்பு

சனவரித் திங்கள் இரண்டாம் நாள் காலை சென்னைக் கடற்கரையில், உலகு உய்ய ஒருங்கான உயர்நெறி வகுத்துத் தந்த வள்ளுவப் பெருந்தகையாரின் உருவச் சிலையும்; சங்க கால அரசவைப் புலவராக இருந்து அரசர்க்கெல்லாம் அறிவுரை வழங்கிய அவ்வை மூதாட்டியாரின் சிலையும்; சங்க காலக் கற்புக்கரசியும் பொற்புடைச் செல்வியும் நீதியை நிலைநாட்டிய வீராங்கனையுமான கண்ணகி சிலையும்; 'மன்னவனும் நீயோ—வளநாடும் உன்னதோ — உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன் — என்னை விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ' என்று பெருமையோடு பேசிய கம்பரின் சிலையும்; இத்தாலிய நாட்டிலிருந்து தமிழகத்துக்கு வந்து தமிழ் மாணவராகி, தேம்பாவணி பாடிய வீரமாமுனிவர் சிலையும்; திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தம்மை, 'தமிழ் மாணவர்' என்று அழைத்துக் கொண்ட இங்கிலாந்துப் பாதிரியார் ஜி. யு. போப் அவர்களின் சிலையும்; தமிழகத்திலே வாழ்ந்து—தமிழைக் கற்று—ஒப்பில்லாத திராவிட ஒப்பிலக்கணத்தை ...

யும்; உரிமைக்குப் போராடிக் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் சிலையும்; புலமைக் கவி பாடி, விடுதலை வேட்கைத் தீயை மூட்டிய பெரும் புலவர் பாரதியார் சிலையும்; புரட்சிக் கனல் தெறிக்கப் புத்துலகத்திற்கான புதுமைக் கருத்துக்களை வாரித் தெளித்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சிலையும் நிறுவப்படவிருக்கின்றன.

அடிப்படைச் சான்றுகள் இடம்பெறும் பொருட்காட்சி

சனவரி மூன்றும் நாள் காலை, சென்னை கடற்கரையிலுள்ள பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில் கலைப் பொருட்காட்சி திறக்கப்படவிருக்கிறது.

இந்தக் கலைக் காட்சி இதுவரையில் அமைந்திராத ஒரு சிறந்த காட்சியாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் தமிழகத்தின் பல்வேறு சிறப்புக்களைக் காணலாம்.

தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை—நாகரிகம்—கலை உணர்வு—பண்பாடு ஆகியவற்றை விளக்கும் பலவேறு அடிப்படைச் சான்றுகள் இங்கே இடம் பெறுகின்றன!

கற்காலம் முதல் நம்முடைய வாழ்க்கை எப்படியெல்லாம் வளர்ந்து வந்திருக்கிறது என்பதற்குரிய சான்றுகளையெல்லாம் இக்காட்சியில் கண்டு மகிழலாம்.

தமிழகத்தில் இதுவரை நடத்திய அகழ்வாராய்ச்சியில் கிடைத்த அருமையான வரலாற்றுச் சான்றுகள், நாகபுரியிலிருந்து கலைக் காட்சிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன!

நால்வகை நிலங்களின் தோற்றம் காண்பீர்

பூம்புகார் அகழ்வாராய்ச்சியில் கிட்டிய பொருள்களும், உறையூர் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பொருள்களும் இக்காட்சியில் இடம்பெற்றிருக்கின்றன.

அருகன்மேடு, ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் கிடைத்த பாண்டங்களும் இங்கே காட்சி அளிக்கும்.

தமிழகத்தில் வழங்கிய பல்வேறு தங்கம்—செம்பு ஈயக் காசுகளும் பிற நாட்டுப் பண்டைய நாணயங்களும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரக் காலத்து காவிரிப்பூம்பட்டினத்து படிமத்தையும், நால்வகை நிலங்களின் தோற்றத்தையும் இக்காட்சியில் காணலாம்.

சொல்லோவியம் வண்ண ஓவியங்களாகின்றன

தமிழகத்தின் கட்டடக் கலை, பல்வேறு சிற்பக்கலை பற்றிய சிறப்புக்களையும், மரம்—கல்—உலோகம்—சுதை மண் முதலியவற்றாலான உருவங்களையும் கண்டு மகிழலாம். சங்க காலம் முதல் பல்வேறு இலக்கியங்களில் காணப்படும் சொல்லோவியங்கள் வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன!

பல்வேறு கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும், நடுகற்களையும் கண்டு பெருமைப்படலாம்.

சுமார் 2,500 ஆண்டுகளாகத் தமிழ் எழுத்து எப்படியெல்லாம் வளர்ந்து வந்திருக்கிறது என்பதைக் காணலாம்

போர்க் கருவிகளையும், மன்னர் தம் மங்கலப் பொருள்களையும், மற்றும் பல தொல்பொருள்களையும் இக்காட்சியில் கண்டு பூரிப்பும் வியப்பும் அடையலாம்.

பெயரளவால் கேட்டதன்றி கண்டறியாத அணிகள்

பண்டைக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட [illegible] இசைக் கருவிகள் திரட்டி வைக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியக் காலத்திலிருந்து பெயரளவால் கேட்டதன்றி, கண்டறியாத பல்வேறு அணிகளையெல்லாம் இக்காட்சியில கண்டு களிப்படையலாம்.

பதுமைகள்- பாத்திரங்கள் வகை வகையாக உண்டு!

தங்கம், வெள்ளி, மரம் ஆகியவற்றாலான வாகனங்களும், பதுமைகளும், பல்வேறு பாத்திர வகைகளையும் இக்காட்சியில் காணலாம்.

சித்த மருத்துவ வல்லுநர் விளக்கம் தருகின்றனர்

எண்ணற்ற ஏடுகளையும், காணற்கரிய பண்டைய அச்சு நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும், எழுத்தாணி வகைகளையும், நடன—நாடகச் சிற்பங்களையும், பதுமைகளையும் இக்காட்சியில் கண்டு களிக்கலாம்.

எண்ணற்ற ஏடுகள் --- காணற்கரிய நூல்கள்

சித்த வைத்திய முறைகள் பற்றிய பல்வேறு நிலைகளையும் உணர்த்தும் ஏடுகளும், மூலிகைகளும், கல்வம் முதலிய கருவிகளும் கொண்டு சித்த மருத்துவ வல்லுநர்கள் விளக்கம் தரவிருக்கின்றனர்.

தொகை வகை கொண்ட விளக்கப் படங்கள்

பல்வேறு வாழ்க்கை முறைகளையும், மன்னர் குடிவழிகளையும், தேர்தல் முறைகளையும், சிற்ப முறைகளையும், நாட்டுப் பிரிவு முறைகளையும் போன்ற பலப்பல தொகை வகைகளைக் கொண்ட விளக்கப் படங்களையும் கண்டு மகிழலாம்.

பொதுவாக இக்கலைப் பொருட்காட்சி தமிழர்களின் தொன்மையையும், நாகரிகச் சிறப்பையும், பண்பாட்டு மேன்மையையும் உலகுக்கு உணர்த்துவதாக அமையும்.

சிறப்புமிக்க நிகழ்ச்சி

கலைப் பொருட்காட்சி திறப்பு விழாவில் மாநாட்டைப் பற்றிய தனி அஞ்சல் தலை வெளியீட்டு விழாவும் சிறப்புற நடைபெறவிருக்கிறது.

அன்று நண்பகல் 2-45 மணிக்குச் சென்னை தீவுத் திடலிலிருந்து கலைக் காட்சிகள் அமைந்த வண்டிகள்—கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் வண்டிகள்—கொடி தாங்கி அணிவகுத்துச் செல்லும் மாணவர்கள்—யானை, குதிரை, காளை—ஓசை எழுப்பும் முரசு—இசை எழுப்பும் கருவிகள் ஆகியவைகளோடு கூடிய அழகுமிக்க ஊர்வலம் புறப்பட்டு கடற்கரையை அடையவிருக்கிறது.

மாலை 6-30 மணிக்கு கடற்கரையில் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் சீரிய தலைமையில் இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு ஜாகீர் உசேன் அவர்கள் துவக்கிவைக்கும் மாநாட்டின் துவக்க விழா, மிக்க சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

சனவரி நான்காம் நாள் காலையிலிருந்து பத்தாம் நாள் வரையில் சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மாநாடும், தீவுத் திடலில் முத்தமிழ் மாநாடும் நாள்தோறும் காலையிலிருந்து இரவு வரையில் நடைபெறவிருக்கின்றன.

எட்டுவகை ஆராய்ச்சிகள் நடைபெறும் நேர்த்தி!

கருத்தரங்கில் மொழி ஆராய்ச்சி—இலக்கிய ஆராய்ச்சி—கல்வி பற்றிய ஆராய்ச்சி—சமூக உறவு பற்றிய ஆராய்ச்சி—கலை, புதைபொருள் பற்றிய ஆராய்ச்சி—அறிவியல், தொழில் நுட்பம் பற்றிய ஆராய்ச்சி—பல்வேறு துறைகளையும் ஒப்புநோக்கும் ஆராய்ச்சி ஆகிய எட்டுவகையான ஆராய்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன. தீவுத் திடலில் நடைபெறும் முத்தமிழ் மாநாட்டில் தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பேரறிஞர்கள் பலரும் பல்வேறு தலைப்புக்களில் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்ற இருக்கிறார்கள்.

இன்னிசை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன

நாள்தோறும் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் பரத நாட்டியமும்—நாடகமும்; அண்ணாமலை மன்றத்தில் இசை அரங்கமும்—நாட்டிய நாடகங்களும்; தீவுத் திடலில் இசை நிகழ்ச்சிகளும்—நாடக நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

'சுற்று'லா செல்கின்றனர்

இந்த மாநாடு முடிந்தவுடன் சனவரித் திங்கள் 12-ம் நாளிலிருந்து 17-ம் நாள் வரையில் தமிழகம் அல்லாத பிற நாடுகளிலிருந்தும், மாநிலங்களிலிருந்தும் வரும் அறிஞர்கள், தமிழகத்திலுள்ள சிதம்பரம், திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோயமுத்தூர் போன்ற முக்கியமான இடங்களுக்குச் சுற்றுலா சென்று, தமிழகத்தின் கட்டடக் கலை—சிற்பக் கலை—ஓவியக் கலை—நாட்டியக் கலை—இசைக் கலை ஆகியவற்றையும், தமிழ் மக்களின் வாழ்க்கை முறையையும் கண்டறிய இருக்கின்றனர்.

எல்லாப் பிரிவினரும் பங்கேற்கும் பாங்கு

இந்த மாநாட்டில், தமிழகத்திலுள்ள எல்லாத் துறையினரும் நிலையினரும், எல்லா வகையினரும் எல்லா வழியினரும், எல்லாத் தகுதியினரும் எல்லாச் சமயத்தினரும், எல்லாக் கட்சியினரும் எல்லாப் பாலினரும், எல்லாப் பருவத்தினரும் எல்லாப் பிரிவினரும் பங்கு கொள்கின்றனர்.

மனதார வரவேற்போம்

இந்தத் தமிழ்ப் பெரும் விழாவில் கலந்துகொள்ள பிற மாநிலங்களிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் வருகை தரவிருக்கும் அறிஞர் பெருமக்களையும், பெரியோர்களையும், சிறப்பு அழைப்பினரையும், தமிழகப் பெருங்குடி மக்களாகிய நாம், 'வாரீர், வாரீர்' என மனதார வரவேற்போமாக!

திக்கெட்டும் கேட்க--- பாரெங்கும் முழங்க!

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ என்று சங்கே முழங்கு' என்று திக்கெட்டும் கேட்க—பாரெங்கும் கேட்க—முழங்குவோமாக!"

உங்கள் உபதேசம் எங்கட்கு வேண்டாம்

இந்தி வெறியர்களுக்கு ஆந்திர அமைச்சர் எச்சரிக்கை

"இந்தி வெறியர்கள், தங்கள் மொழியை யார்மீதும் திணிக்கக்கூடாது"

என்று ஆந்திர் வருவாய்த்துறை அமைச்சர் திரு. வி. பி. இராசு எச்சரித்தார்.

"அது நல்லது என்றால், நாங்களே முன்வந்து ஏற்போம்" என்றும் அவர் சொன்னார்.

ஐதராபாத்தில் ஓர் மாநாட்டை துவக்கிவைத்து அவர் பேசுயில் மேலும் கூறியதாவது :—

"மொழி ஒன்றினால் மட்டுந்தான் மக்கள் ஒன்றுபடுவார்கள் என்பது சரியல்ல; இந்தியைத் தேசிய மொழியாக ஆக்காவிட்டால், நாட்டில் ஒற்றுமை இராது என்று இந்தி வெறியர்கள் சொல்வது தவறாகும். ஆங்கிலமோ இந்தியோ, தெலுங்கோ அல்லது தமிழோ மக்களை ஒன்றுபடுத்திவிடவில்லை; சரித்திரமும், கலாசாரமும்தான் ஒன்றுபடுத்தியுள்ளன."

காலத்தின் தேவையை நிறைவு செய்ய வந்தவர் அண்ணா

‘புகழின் உச்சத்தை அவர் எட்டும் காலத்தை விரைவில் எதிர்பார்ப்போம்’---உருவச் சிலைத் திறப்பு விழாவில் ஆற்காட்டு இராமசாமி உருக்கமான உரை

சென்னை, சன. 1—

“அன்று அண்ணாவைத் தோற்கடித்தார்கள் ; அதற்கு அவர்கள் கையாண்ட முறைகளைச் சொல்லவும் கூசுகிறது ; அதன் விளைவு, அண்ணா அவர்கள், மாநிலங்கள் அவைக்குச் சென்றார் ! அங்கு அவர் ஆற்றிய முதல் பேச்சே டில்லியைக் குலுக்கியது ! ‘தி. மு. கழகம், கணிப்பில் கொள்ளத்தக்கதொரு ‘சக்தி’ என்று, நேரு தன் தோழர்களிடம் சொன்னார் ! அன்று துவங்கியது அண்ணாவின் ஏற்றம் !

“இன்று அவர் நடத்திச் செல்லும் இந்த அரசே எல்லாவற்றிலும் நிலையான அரசாகக் குன்று போன்ற உறுதியுடன் நிற்கிறது !

“இயற்கையின் அருளால் அண்ணா தலைமையில் இயங்குகிற ஒரு நல்ல அரசாங்கத்தை இங்கே பெற்றிருக்கிறோம் ! இல்லாவிட்டால், நம்மால் அழிவைத் தவிர்த்திருக்க முடியாது !

“அவர் எது சொன்னபோதிலும், அது குறித்தெல்லாம் கவலைப்படாது மேல்நோக்கிச் செல்வோம் !

“மத்திய அமெரிக்காவில் குமுறி அடங்கி இப்போது புகைகூடக் கக்கிடாத பழைய எரிமலைகள் உண்டு ; அதுபோல், பதவி இழந்தோர் இருக்கின்றனர் ! அவர்கள் ஏச்சுக்களைப் புறக்கணித்து, உறுதியோடும் வலிவோடும் மேல்நோக்கி முன்னேறுவோம் !

“காலத்தின் தேவையை நிறைவு செய்ய வந்த தலைவர் அண்ணா ! அவர், உங்களுக்கு மட்டுமன்று—எனக்கும் தலைவரே ! அவருக்கு விதிக்கப்பட்டுள்ள அந்த உயர் நிலையை அடைந்திட வேண்டும்—இந்தியா முழுவதற்கும் தலைமைப் பொறுப்பை அண்ணா ஏற்றிடும் அந்நாளைக் காண நான் ஆவலுள்ளவனாக இருக்கிறேன !”

என்று, உணர்ச்சி ததும்ப—உள்ளந்திறந்து—உருக்கமுடன் அறிவாளர் ஆற்காடு இராமசாமி (முதலியார்), பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவச் சிலையைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

62-வது பார்க்பேர் பொருட்காட்சி
எஸ்.ஐ.ஏ.ஏ. மைதானம், சென்னை-3
3-1-68 புதன்
ரேக்ளா பந்தயங்கள்
நாளை கடைசி நாள்
அமெச்சூர் நாடகம்
நடைபெறும்

இணைப்பு மொழி-- அர்த்தமற்ற கூச்சல்!

சென்னை, சன. 1—

“இந்திமீது தனிப் பற்றுக்கொண்ட தலைவராக இராசேந்திர பிரசாத் இருந்ததால், அவரது ஒரு வாக்கினை அதிகமாகப் பெற்று இந்திக்கு வெற்றி தேடிவிட்டதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் !

“200 ஆண்டுகளே ஆயினும், இவர்களால், 50 கோடி மக்களை ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும்படியும் படிக்கும்படியும் செய்யமுடியுமா ? அப்படி முடியுமென்று சொல்லுவது வடிகட்டிய முட்டாள்தனமாகும் !

“எனவே, கோடிகோடியாகக் கொட்டி இந்தியினை வளர்த்திடத் துணியும் முன்பு, ஓராயிரம் முறை சிந்திக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

“‘தேசிய மொழி’ என்றும், ‘இணைப்பு மொழி’ என்றும் பேசுகிறார்களே—அரசியல் சட்டத்தில் எங்கேனும் ஒரு இடத்தில் இந்தச் சொற்றொடர்களைக் காட்டிட முடியுமா ?

“உணர்ச்சிமயமான ஒருமைப்பாடு வேண்டுமாம் ! அவர்கள் கடைபிடிக்கும் போக்கு அத்தகைய ஒருமைப்பாட்டை உருவாக்கும் ஆற்றலை உடையதா ? உணர்ச்சி மயமான ஒருமைப்பாடு என்றால் அது எப்படி வரும் ? எல்லோரும் கூடிக்கொண்டு ஒப்பாரி வைப்பதா ?

“நாளை முதல் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டில் 35 நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் கலந்துகொள்கின்றனர் ; அந்த அளவுக்குத் தமிழ் மொழி—தமிழ் இலக்கியம்—தமிழ்ப் பண்பாடு பரவியிருக்கிறது ! இந்திக் கலாசாரம் எத்தனை நாடுகளில் பரவியிருக்கிறது ?

“இந்தி இலக்கியத்தின் வயதே 150 ஆண்டுதானே ! அதிலே, ‘இலக்கிய நூல்கள’ என்று சொல்லக்கூடிய வகையில் உள்ள நூல்கள் இரண்டு அல்லது மூன்றுதானே ! இருநூறு ஆண்டுகளாக 50 கோடி மக்களின் மொழியாக ஆகமுடியாத இந்தியை, 10 அல்லது 15 ஆண்டுகளில் ஆக்கிவிட முயலுவது எவ்வளவு பெரிய அபத்தமான செயலாகும் ?

“யாருக்கும் யாருக்குமிடையே இணைப்பு மொழி தேவை? நம் நாட்டில் உள்ள ஒரே இணைப்பு மொழி நான்கு தென் மாநிலங்களையும் இணைக்கும் தமிழ் மொழிதான் ; எனவே, இணைப்பு மொழி என்பது, ‘உணர்ச்சிமயமான ஒருமைப்பாடு’ என்ற கோஷத்தைப் போன்ற அர்த்தமற்ற கூச்சலேயாகும் !”

--டாக்டர் ஏ. இராமசாமி

(அண்ணா சிலைத் திறப்புவிழாவில்)

‘அவன் கிடக்கிறான் குடிகாரன்--எனக்கு ஒரு ‘மொந்தை’ ஊற்று!’

தீவிர மதுவிலக்குப் பிரசாரகரின் ‘புனித சேவை’!

சென்னை, சன. 2—

“சமூக ஊழியர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களாக இருக்கக்கூடாது”

என்று இந்திய சமூகப் பணிக் கழகத்தின் புதுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர் ஏ. ஆர். வாடியா கூறினார்.

இந்த ‘வேடதாரி’களின் போக்கைப்பற்றி அவர், தமது சொந்த அனுபவம் ஒன்றையும் எடுத்துச் சொன்னார் :—

“அண்மையில் ஒரு வெளிநாட்டுத் தூதரகத்தில் அளிக்கப்பட்ட ஒரு விருந்துக்கு நான் போயிருந்தேன். மதுவிலக்கின் அவசியத்தைத் தீவிரமாக வற்புறுத்தும் ஒருவர், கையில் ஒரு குவளை ‘விஸ்கி’ வைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன் ; ‘மதுவிலக்கை நீங்கள் ஆதரிக்கவில்லையா ?’ என்று அவரைக் கேட்டேன் ; ‘அப்படியெல்லாம் ஒன்றுமில்லையே ; இன்னமும் நான் மதுவிலக்குக் குழு உறுப்பினராகத்தான் இருக்கிறேன்’ என்று அவர் பதில் சொன்னார்.

“‘விஸ்கி’ அருந்தும் ஒருவர் எதற்காக மதுவிலக்குப் பிரசாரம் செய்யவேண்டும் ?”

அண்ணாவிடம் விட்டுவிடுவீர்!

மாணவர்களுக்கு டாக்டர் ஏ. ராமசாமி அறிவுரை

“இளைஞர் சமுதாயத்தை நான் கேட்டுக் கொள்வேன் — நீங்கள் மொழிச் சிக்கலுக்கான தீர்வு காணும் பொறுப்பினை அண்ணா அவர்களிடம் விட்டுவிடுங்கள் ; உங்களுடைய நலனை அவர் பாதுகாப்பார் !

“‘அறிவே சக்தி’ என்ற முறையில், அறிவைப் பெருக்கும் பணியில் ஈடுபடுங்கள் ! உயர் கல்வியையும் தமிழில் கற்கலாம்” என்ற நிலை உருவாகிறது —இதை நான் வரவேற்கிறேன் !

“மருத்துவம், பொறியியல், சட்டம் ஆகிய துறைகளில் தமிழுக்கு ஆங்கிலம் துணையாக இருக்கும்.”

—அண்ணா சிலைத் திறப்பு விழாவில்

சீன---மலாய் மொழிகளில் திருக்குறள்

உலகத் தமிழ் மாநாட்டில் வெளியீடு

ஹாங்காங் தீவைச் சேர்ந்த சீனத் தமிழ் அறிஞர் டாக்டர் செங்சீ, திருக்குறளைச் சீன மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

டாக்டர் இஸ்மாயில் உசேன் என்ற மலாசியத் தமிழறிஞர், திருக்குறளை மலாய் மொழியில் மொழிபெயர்த்திருக்கிறார்.

இந்த இரு நூல்களும் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்படும்.

தமிழ் மன்னர் பரம்பரைக்கும்—மலாயா மக்களுக்கும் இடையே தொன்றுதொட்டு இருந்துவரும் தொடர்பை விளக்கும் 300 ஆண்டுப் பழமையான புத்தகத்தின் மொழிபெயர்ப்பான ‘மலாக்கா மன்னர் வரலாறு’ என்ற புத்தகமும் தமிழ் மாநாட்டின்போது வெளியிடப்படும்.

தமிழ் ஆராய்ச்சிக்கான வாய்ப்பைப் பரவலாக்கும் வகையில், கருத்தரங்கையொட்டி உருவாக்கப்பட்டுள்ள வழிகாட்டிப் புத்தகம் ஒன்றும் வெளியிடப்படுகிறது.

பல்வேறு உலக நாட்டு அறிஞர்கள் தமிழ் வளர்க்க ஆற்றிய தொண்டு குறித்து, தனிநாயகம் அடிகள் தொகுத்த புத்தகம், உலகத் தமிழ் அறிஞர்கள் பற்றிய வழிகாட்டியாகத் திகழ்கிறது.

அபுனுசி நிகிதன் என்ற இரஷ்யர், கி. மு. 1466—62-ல் மூன்று கடல்களைக் கடந்து குதிரைகளை விற்கத் தென்னிந்தியாவுக்கு வந்த வரலாறு இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

• செக்கோஸ்லாவாகியா நாட்டுத் தமிழ் அறிஞரான சமீல் சவலபில், தமிழகத்தைச் சேர்ந்த இந்தியத் தூதர் ஒருவரிடமும் அவரது சமையற்காரரிடமும் தமிழ்ச் சொற்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலை குறித்து வருந்தியிருப்பது பற்றியும், பிராக் நகரில் 1948-ல் துவக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இப்போது தமிழ் இடம் பெற்றுள்ளது பற்றி அவர் மகிழ்வு தெரிவித்துள்ளதும் இப்புத்தகத்தில் உள்ளது.

தற்காலத்தமிழ் ஆராய்ச்சிகுறித்தும் இந்நூல் கூறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை--13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தற்காக மண்ணிற்குள் மறைந்து கிடக்கும் வேர்கள், சம்மானம் எதுவும் கேட்பதில்லை !

அதேபோலத்தான், இன்று இந்தியத் துணைக் கண்டத்தின் பிரச்சினை எதுவாக இருந்தாலும், ‘தி. மு. க.—வின் கருத்து என்ன ? தி. மு. க. ‘என்ன சொல்கிறது’ என்று உன்னிப் பார்க்கும் நிலை வளர்ந்ததே—அது யாரால் ?

எங்குப் பார்த்தாலும் தி.மு.க.—எதைச் சொன்னாலும் தி.மு.க.—என்று, ‘தி.மு.க., தி.மு.க.’ என்ற பேச்சு ஒலிக்கிறதே—அந்த நிலை மலர்ச்சிக்கு யார் காரணம் ?

சட்டமன்றத்தில்—பாராளுமன்றத்தில் சுவை சொட்டச் சொட்ட அமைதியாக வாதிடும் ஆற்றல் மறவர்களை உருவாக்கிய பெருமை யாருடையது ?

தம் ஆற்றலை வளர்த்துக்கொண்டதோடு மட்டும் நின்றுவிடாமல், ஆற்றல் உள்ளவரையெல்லாம் தம் பக்கம் சேர்த்துக்கொண்டு, இடந்தெரிந்து அவர்கள் ஒளிர வழி செய்த தகைமையாளர் யார் ?

அந்தத் தனி மனிதர்தான், பேரறிஞர் அண்ணா ! அவருக்குச் செய்யும் சிறப்புத்தான் இந்தச் சிலையெடுப்பு நிகழ்ச்சி !

ஊரெல்லாம் ஒருங்கிணைந்து நின்று -- உரத்த குரல் எழுப்பி, இன்று அண்ணாவைப் பாராட்டிக்கொண்டிருக்கின்றன ! வாழ்நாளில் சிலையெடுக்கப் பெரும் பேறுபெற்ற பேரறிஞரைத் தம் முதல்வராய்ப் பெற்ற வெற்றியைத் தமிழ்நாட்டுக்கு வந்த நுண்மாண் நுழைபுலமிக்க அறிவாளரெல்லாம் வியந்து புகழ்கிறார்கள் !

தமிழ் மாநாட்டின் தலை நிகழ்ச்சி, இந்தச் சிலை திறப்பு—தமிழ்நாட்டின் முதல்வருக்குச் சிலையெடுக்கும் பெருஞ் சிறப்பு !

தியாகத்தை உள்ளபடி மதிக்கக் கற்றுக்கொண்டது தமிழ் மண் ! இனி, தமிழ் வளர்ச்சியைத் தடுத்திட யாராலும் இயலாது—தமிழரின் கூட்டைத் தகர்த்திடவும் முடியாது ! அதன் முன்னறிவிப்பே அண்ணாவின் சிலையெடுப்பு விழா !

வாழ்க—சிலைபெற்றுப் புகழ் மேவிய பேரறிஞர் அண்ணா !